வட உடு வழிகாட்டி

தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசிற் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை - 2021

பகுதி - I 1 மணித்தியாலம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ் வினாத்தாளில் **40** வினாக்கள் உள்ளன. **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- ஒவ்வொரு வினாக்களிலும் மூன்று விடைகள் வீதம் தரப்பட்டுள்ளன. அவற்றிடையே ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்து ஒப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப் பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளி களும் சரியென உறுதிப் படுத்துகிறேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

- **1,2** ஆகிய வினாக்களுக்கு முதலில் தரப்பட்ட கட்டத்தில் உள்ள உருக்களுடன் பொருந்தக் கூடிய உருவைத் தெரிவு செய்க.


1.




(1)




(2)




(3)



2.



(1)



(2)




(3)




- **3,4 ஆகிய வினாக்களுக்கு தரப்பட்ட உருக்களை அவதானித்து விடை தருக.**

3.



உரு A




உரு B


A,B ஆகிய உருக்களுக்குமிடையே எத்தனை வேறுபாடுகள் உள்ளன?

(1) 4 **(2)** 5 **(3)** 6

4.




உரு C





உரு D

(1) நான்கிலும் குறைவாகும் **(2)** நான்காகும் **(3)** நான்கிலும் கூடவாகும்

5. கீழே தரப்பட்ட கோலம் தொடர்ந்து செல்லும் போது ஆறாம் இடத்தில் வரத்தக்க அட்டையைத் தெரிவு செய்க.









4 **5** **6** .....


(1)




(2)





(3)



6. கீழுள்ள ஈர்க்குகளின் முழு நீளத்தையும் அதே விதத்தில் பயன்படுத்தி ஒரு ◇ வடிவத்தை அமைக்க முடியுமான தொகுதி எது?

(1) 

(2) 

(3) 


7. இவ்வினாத்தாளின் முதலாம் பக்கத்திலுள்ள தகவல்களுக்கேற்ப சரியான விடையைத் தெரிவு செய்க.


(1) இவ்வினாத்தாளிலுள்ள வினாக்களின் எண்ணிக்கை விடையளிக்கத் தரப்பட்டுள்ள நிமிடங்களின் எண்ணிக்கையிலும் கூடவாகும்.


(2) இவ்வினாத்தாளிலுள்ள வினாக்களின் எண்ணிக்கை விடையளிக்கத் தரப்பட்டுள்ள நிமிடங்களின் எண்ணிக்கையிலும் குறைவாகும்.


(3) இவ்வினாத்தாளிலுள்ள வினாக்களின் எண்ணிக்கை விடையளிக்கத் தரப்பட்டுள்ள நிமிடங்களின் எண்ணிக்கைக்குச் சமமாகும்.

8. ஒரு பக்கத்தின் இரு பக்கங்களில் இலக்கங்கள் பொறிக்கப்பட்ட விதம் முதலில் காட்டப்பட்டுள்ளது. அதே விதத்தில் இலக்கங்கள் பொறிக்கப்பட்ட விடையைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

பின்வரும் கவிதையை வாசித்து **9,10** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

காலை மாலை உலாவி நிதம்
காற்று வாங்கி வருவோரின்
காலைத் தொட்டுக் கும்பிட்டுக்
காலன் ஓடிப் போவானே!

9. இக் கவிதையில் குறிப்பிடப்படும் **முக்கியமான** செய்தி யாது?

(1) காலை மாலை உலாவி வருவோர் காலைக் காலன் தொடுவான்

(2) காலையிலும் மாலையிலும் உலாவி வர வேண்டும்

(3) காலை மாலை உலாவி வருவோர் காலன் ஆவார்கள்

10. இக் கவிதையின் வரிகளில் தரப்பட்ட கருத்துக்களை சொற்களில் முறையே காட்டும் விடை எது?

(1) உலாவுதல் ⇨ காற்று வாங்குதல் ⇨ காலைக் கும்பிடுதல் ⇨ காலன் ஓடிப்போதல்

(2) காற்று வாங்குதல் ⇨ உலாவுதல் ⇨ காலைக் கும்பிடுதல் ⇨ காலன் ஓடிப்போதல்

(3) காற்று வாங்குதல் ⇨ உலாவுதல் ⇨ காலன் ஓடிப்போதல் ⇨ காலைக் கும்பிடுதல்

11. ஏறி அமர்ந்தாலும் ஓங்கி மிதித்தாலும் முகஞ் சுழிக்கமாட்டான்
நண்பனாய்த் துணை வருவான். இங்கு குறிப்பிடப்படுவது

(1) ஈருருளி பற்றி **(2)** இருக்கை பற்றி **(3)** நண்பன் பற்றி

● கதை ஒன்றின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது. அதிலுள்ள வெற்றிடங்களுக்குப் பொருத்தமான சொற்கள் இடம்பெறும் பகுதியைத் தெரிவு செய்க.

12. மண்ணில் செய்யப்பட்ட இவை, ... ஒட்டி அமைக்கப்பட்டிருக்கும். புகை போக்கிகளுடன் இணைக்கும் வகையில், ... ஒரு மூலையில் துளை இடப்பட்டிருக்கும். அந்தத் துளை ..... இணைக்கப்பட்டு, குழாய், கூரையின் மேல்பாகத்துக்கு வெளியே நீண்டிருக்கும்

(1) அடுப்பை சுவரை மண்குழாயுடன்

(2) சுவரை அடுப்பை மண்குழாயுடன்

(3) சுவரை அடுப்பின் மண்குழாயுடன்

● பின்வரும் அட்டவணையைப் பார்க்க

	முதலாம் நிரல் ⇩	இரண்டாம் நிரல் ⇩	மூன்றாம் நிரல் ⇩
முதலாம் நிரை ⇨	**A**	**B**	**C**
இரண்டாம் நிரை ⇨	**D**	**E**	**F**
மூன்றாம் நிரை ⇨	**G**	**H**	**I**

படிமுறை **1,2** ஆகியவற்றில் உள்ள கூற்றுக்களின் படி அட்டவணையை மாற்றி **13,14** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.

படிமுறை 1 – முதலாம் நிரை உள்ள இடத்திற்கு மூன்றாம் நிரையை மாற்றுதல்

படிமுறை 2 - இரண்டாம் நிரல் உள்ள இடத்திற்கு மூன்றாம் நிரலை மாற்றுதல்


13. மாற்றங்களைச் செய்த பின் நடு அடைப்பில் உள்ள எழுத்து எது?


(1) G **(2)** H **(3)** I


14. மாற்றங்களைச் செய்ய முன்பு எழுத்து H இருந்த இடத்தில் மாற்றங்களைச் செய்த பின் உள்ள எழுத்து எது?


(1) C **(2)** A **(3)** J

15. வெற்றிடத்திற்குப் பொருத்தமான பகுதியைத் தெரிவு செய்க.



(1) 

(2) 

(3) 

16. குறியீடு ❄ இனை இரு தடவைகளும், குறியீடு ✹ இனை ஒரு தடவையும் பயன்படுத்தி எண் **533** எழுதப்பட்டிருந்தது. **533** இல் இருந்து **100** இனைக் கழித்து வரும் எண்ணைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) ✹❄✹ **(2)** ❄✹❄ **(3)** ✹✹❄

17. கடதாசித் துண்டு A | ❄ | ✠ | ♦ | ✹ | கடதாசித் துண்டு B | ❖ | ☼ |

கடதாசித் துண்டு A இன் மீது இருக்கும் குறியீடு ❄ மீது கடதாசித் துண்டு B இன் மீது இருக்கும் குறியீடு ❖ ஐ வைத்தால் தோன்றும் உருவைத் தெரிவு செய்க.

(1) | ❖ | ❄ | ♦ | ☼ | **(2)** | ❖ | ☼ | ♦ | ✹ | **(3)** | ✠ | ❄ | ❖ | ☼ |

18,19 ஆகிய வினாக்களுக்கு வெறுமையாகவுள்ள அடைப்புக்குப் பொருத்தமான உருவத்தைத் தெரிவு செய்க.

18.

⇧	⇗	⇨
⇘	⇩	⇙
⇦		⇧

(1) ⇖ **(2)** ⇗ **(3)** ⇘

19.

🕐	🕑	🕒
🕓	🕔	🕕
🕖	🕗	

(1) 🕘 **(2)** 🕒 **(3)** 🕓

20. குமார் ஒரு ஏணியின் ஐந்தாம் படியின் மீது நிற்கின்றான். அவன் இன்னும் நான்கு படிகள் ஏறினால், ஏணியின் நடுப்படியை அடைவான் எனில், அவ் ஏணியில் உள்ள படிகள் எத்தனை?

(1) 13 **(2)** 19 **(3)** 17

21. ஒரு பிள்ளை படகொன்றில் நான்கு பிள்ளைகளை ஏற்றிச் சென்று அக்கரையில் உள்ள ஒரு பிள்ளையுடன் சேர்த்து மீண்டும் இக்கரைக்கு வந்து இரண்டு பிள்ளைகளை அழைத்துச் சென்று அங்கிருக்கும் பிள்ளைகளுடன் சேர்த்துத் தானும் சேர்ந்து நின்றது. எனில், அங்கு நின்ற பிள்ளைகள் எத்தனை பேர்?

(1) 4 **(2)** 6 **(3)** 7

22. அசீம் பிறக்கும் போது அவனது தாயின் வயது 23 ஆகும். அசீமின் தம்பி பிறக்கும் போது அவனது தாயின் வயது 28 ஆகும். அசீமின் தற்போதைய வயது 15 எனில், அவனது தம்பியின் தற்போதைய வயது யாது?

(1) 10 **(2)** 5 **(3)** 6

23. 31 நாட்களைக் கொண்ட ஒரு மாதத்தின் முதல் நாள் புதன் கிழமையாகும். அம்மாதத்தில் முதலாவது நாள் தொடங்கி இரண்டாவது திங்கட்கிழமை வரைக்கும் சனி,ஞாயிறு உட்பட ஒரு கூட்டம் நடைபெற்றது. கீதா அக் கூட்டத்தில் ஏழு நாட்கள் சமூகமளிக்கவில்லை. எனில் அவள் நிச்சயமாகச் சமூகமளித்திருக்காத ஒரு நாள் எது?


(1) திங்கட்கிழமை **(2)** செவ்வாய்க்கிழமை **(3)** புதன்கிழமை


24. 

இந்த உருவைத் தடித்த கோடுகள் வழியே குறியீடு ■ வெளியே தெரியுமாறு மடித்து ஒரு நான்முகி செய்யப்பட்டுள்ளது. அந்த நான்முகியை மடித்த பின் தோன்றும் சரியான உருவம் எது?

(1) 

(2) 

(3) 


25. 

இவ்வுருவில் காணத்தக்க சதுரங்கள் எத்தனை?

(1) 14 **(2)** 15 **(3)** 19

26. மூன்று நபர்களின் பெயர்கள் ஆங்கில எழுத்துக்களைப் பயன்படுத்திக் குறியீட்டு முறையாக FAKE, KIKE, TOKE என எழுதப்பட்டிருந்தன. அவர்களின் பெயர்களை ஒழுங்குமுறையில் காட்டும் விடை எது?

(1) கருணன்,வருணன்,அருணன் **(2)** பரதன்,வரதன்,கந்தன் **(3)** மகேசன்,சபேசன்,கணேசன்

27. 


உருவில் காட்டப்பட்ட தராசு சமநிலையில் உள்ளது. அதன்படி, சரியான கூற்று எது?

(1) மூன்று முக்கோணிகள் ஒரு வட்டத்திற்குச் சமம்.

(2) ஒரு சதுரத்திற்கு இரு முக்கோணிகள் சமம்.

(3) சதுரத்தின் நிறை வட்டத்தின் நிறையிலும் கூடியதாகும்.

28. உரு B இலுள்ள எத்தனை வடிவங்கள் உரு A இல் உள்ளன?



உரு **A**



உரு **B**

.

(1) 4 **(2)** 6 **(3)** 8


29. ஒரு வினாவிடைப் போட்டியில் ஐந்து வினாக்கள் கேட்கப்பட்டன. முதல் வினாவிற்கான புள்ளிகளின் எண்ணிக்கை 3 ஆகும். அடுத்த நான்கு வினாக்களின் புள்ளிகளின் எண்ணிக்கை வினாவிற்கு முன் உள்ள வினாவின் புள்ளிகளின் எண்ணிக்கையின் மூன்று மடங்காகும். எனில், 216 புள்ளிகளைப் பெற்ற மாணவன் எந்த வினாவிற்குச் சரியான விடையளிக்கவில்லை?

(1) இரண்டாம் **(2)** மூன்றாம் **(3)** நான்காம்

30. ஒரு பிள்ளை பின்வருமாறு கூறுகின்றது. எனக்கு ஒரு அண்ணாவும் ஒரு தங்கையும் மாத்திரம் உள்ளனர். எனது அம்மாவிற்கு ஒரு மகனும் இரு மகள்மாரும் உள்ளனர். இதன்படி அப்பிள்ளை குடும்பத்தின்

(1) மூத்த மகள் ஆவார் **(2)** இரண்டாம் மகள் ஆவார் **(3)** இளைய மகள் ஆவார்

31. பூக்கள், செடிகளில் பூக்கும் பூக்கள், கொடிகளில் பூக்கும் பூக்கள், நித்திய கல்யாணி, ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்புகள் கீழே காட்டப்பட்டுள்ளன. இங்கு A இனாற் குறிப்பிடப்படுவது?



(1) பூக்கள்

(2) செடிகளில் பூக்கும் பூக்கள்

(3) கொடிகளில் பூக்கும் பூக்கள்

32. ஒரு நிகழ்வின் மூன்று சந்தர்ப்பங்களை ஒழுங்கு முறையில் காட்டும் விடையைத் தெரிவு செய்க.

(1) பழத்தைப் பறித்தல் → பழச்சாறு தயாரித்தல் → தோலை உரித்தல்

(2) வீட்டைக் கட்டுதல் → அத்திவாரமிடல் → ஓடு போடுதல்

(3) விதையை நடுதல் → செடி முளைத்தல் → பூக்கள் பூத்தல்

33. ஒரு தோட்டத்தில் தென்னை மரங்களின் எண்ணிக்கை பலா மரங்களின் எண்ணிக்கையிலும் இரு மடங்காகும். தேக்கு மரங்களின் எண்ணிக்கை தென்னை மரங்களினதும் பலா மரங்களினதும் எண்ணிக்கையின் மொத்தத்திற்குச் சமமாகும். வேம்பு மரங்களின் எண்ணிக்கை தேக்கு, பலா, தென்னை ஆகிய மரங்களின் எண்ணிக்கைக்குச் சமமாகும். அதனை வரைபில் காட்டும் உருவைத் தெரிவு செய்க?

(1)

வேம்பு		
தென்னை	பலா	தேக்கு

(2)

வேம்பு		
தென்னை	பலா	தேக்கு

(3)

தென்னை	வேம்பு
பலா	தேக்கு


34. A, B, C ஆகிய மூன்று வகுப்புக்களிலும் உள்ள மாணவர் மொத்தத் தொகை A வகுப்பிலுள்ள மாணவர் தொகையின் மூன்று மடங்காகும். எனில், B, C ஆகிய வகுப்பிலுள்ள மாணவர் தொகை வகுப்பு A இலுள்ள மாணவர் தொகையிலும்

(1) 2 மடங்கு **(2)** 3 மடங்கு **(3)** 4 மடங்கு

35. ஒரு சமதள நிலத்தில் அப்துலிற்கு 20 மீற்றர் தெற்கே ரஹ்மான் நிற்கின்றான். ரஹ்மானை நோக்கி அப்துல் செல்லத் தொடங்கும் அதே கணத்தில் ரஹ்மான் அப்துலின் கதியின் இரு மடங்கான கதியில் வடக்கு நோக்கிச் செல்கின்றான். விமலன் 10 மீற்றர் தூரம் நிமலனை நோக்கிச் சென்ற பின் இருவருக்கிடையிலான தூரம் யாது?

(1) 10 m **(2)** 20 m **(3)** 30 m


36.



வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் எது?

(1) 2 **(2)** 3 **(3)** 4


37.



இவ்வமைப்பிலுள்ள உருளைக் குற்றிகள் எத்தனை?

(1) 10 **(2)** 16 **(3)** 20

38. கீழுள்ள பாத்திரங்களை அவதானிக்குக. அவற்றில் ஒன்று விட்ட ஒரு பாத்திரத்தில் நீர் இருக்க வேண்டும். எனில், அதனை வைப்பதற்கு இலகுவானதும் வேகமானதுமான வழிமுறை எது?




(1)B பாத்திரத்திலுள்ள நீரை E பாத்திரத்தில் ஊற்றுதல்

(2)A பாத்திரத்திலுள்ள நீரை D பாத்திரத்தில் ஊற்றி C பாத்திரத்திலுள்ள நீரை வெளியேற்றல்

(3)C பாத்திரத்திலுள்ள நீரை E பாத்திரத்தில் ஊற்றி B இலுள்ள நீரை C இல் ஊற்றுதல்

● ஒரு பாடசாலையின் கட்டடங்களின் மேற்பக்க வரைபடம் கீழே தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து **39,40** ஆகிய வினாக்களுக்கு விடை தருக.



39. மேலுள்ள படத்தின் படி சரியான கூற்று?

(1) அதிபர் அலுவலகத்திற்கு வடக்கே நூலகமும் பிரதான கதவிற்கு மேற்கே அதிபர் அலுவலகமும் உள்ளன.

(2) பிரதான மண்டபத்திற்கு மேற்கே நூலகமும் சிற்றுண்டிச் சாலைக்குத் தெற்கே பிரதான மண்டபமும் உள்ளன.

(3) பிரதான கதவிற்குக் கிழக்கே அதிபர் அலுவலகமும் அதிபர் அலுவலகத்திற்கு வடக்கே வகுப்பறையும் உள்ளன.

40. அதிபர் அலுவலகத்திலிருந்து வகுப்பறைக்குச் செல்லும் ஒருவர் தமது இடது கைப்பக்கத்திலே முதலாவதாகக் காணத்தக்கது

(1) சிற்றுண்டிச் சாலையை

(2) பிரதான மண்டபத்தை

(3) நூலகத்தை

வட உடு வழிகாட்டி

தரம் 05 மாணவர்களுக்கான புலமைப்பரிசிற் பரீட்சைக்கான மாதிரிப் பரீட்சை - 2021

பகுதி – II 1 மணித்தியாலம் 15 நிமிடம்

சுட்டெண்: .....

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உமது **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள்ளே உள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.
- **மூன்றாம் பக்கத்தில்** குறித்த இடத்திலும் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ் வினாத்தாளில் **60** வினாக்கள் உள்ளன (சில வினாக்களில் உப பகுதிகள் உள்ளன). **எல்லா வினாக்களுக்கும் உரிய விடைகளை இவ்வினாத்தாளிலேயே** தருக.
- விடையளிக்குமாறு கேட்கப்பட்ட வினாக்களில் **அவற்றிற்கான சரியான விடையைப் புள்ளிக்கோட்டில் இடுக.**
- மூன்று விடைகள் தரப்பட்டுள்ள வினாக்களில் ஒவ்வொரு வினாவிற்கும் உரிய **சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**
- செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.

விடைத்தாள் பரீட்சகருக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப் புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்து ஒப்பமும் குறியீட்டு எண்ணும்
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற் கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	V/I/T
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப் படுத்துகின்றேன்.	V/I/T
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளி களும் சரியென உறுதிப் படுத்துகிறேன்.	V/I/T/EMF
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன். இறுதிப் புள்ளிகள் சரியாகும்.	V/I/T/CH

1. பின்வரும் பந்தியை வாசியுங்கள்

தற்போது உங்களுக்காக வானொலியில் வர்ணனை கூறுபவர் உங்கள் அபிமான தமிழ்ச்செல்வன். துரையப்பா விளையாட்டரங்கம் மலைபோல் குவிந்த இரசிகர்களால் நிறைந்து காணப்படுகின்றது. விளையாட்டு இன்னும் சில விநாடிகளில் ஆரம்பிக்கவுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது. வீரர்கள் தமக்குரிய விளையாட்டு உபகரணங்களை எடுக்கின்றனர். நடுவர் பூவா தலையா போட்டுப் பார்த்ததில் இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்துள்ளது.

(i) இவ் வர்ணனையில் எவ் விளையாட்டைப் பற்றிக் குறிப்பிடப்படுகின்றது? .....

(ii) இங்கு குறிப்பிடப்படும் உவமானத்தை எழுதுக? .....

(iii) 'வீராங்கனைகள்' என்பதற்கான எதிர்ச்சொல்லை எழுதுக? .....

(iv) இடப் பெயர்ச்சொல் ஒன்று தருக? .....

(v) 'பல' என்பதற்கான எதிர்ச் சொல்லை எழுதுக? .....

(vi) சினைப் பெயர்ச்சொல் ஒன்று தருக? .....

2. உயர்திணை ஒருமை எதிர்கால வினைச்சொல்லைத் தெரிவு செய்க.

சிறுமி ஓடுவாள் விழுந்தன ஓடும் பாயும்

3. பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் அமைக்குக.

இயற்கை / பெரும் / அமைகின்றன / அளித்த / பரிசாக / மரங்கள் / நிழல்

.....

4. பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (X) எனவும் அடையாளமிடுக.

(i) கதவின் திறப்புக் காணாமற் போய் விட்டது. (.....)

(ii) காலையில் சேவல் கூவியது. (.....)

(iii) கமலும் ஹனிபாவும் பாடசாலைக்குச் சென்றனர் (.....)

(iv) விமலாவும் வாணியும் ஓடி வந்தன. (.....)

5. பொருத்தமான நிறுத்தக்குறிகளை இடுக.

(i) நீங்கள் எந்தப் பாடசாலையில் படிக்கின்றீர்கள்

(ii) என்ன உனக்கு ஆபத்தா

6. பின்வரும் பழமொழிக்கு ஒத்த பழமொழியை எழுதுக.

(i) பழகப் பழகப் பாலும் புளிக்கும் - .....

(ii) காற்றுள்ள போதே தூற்றிக் கொள் - .....

7. பின்வரும் வாக்கியங்களை எழுத்து வழக்கில் எழுதுக.

(i) அவையள் நேற்று வந்தார்கள் - .....

(ii) ஏன் நேற்றுப் படிக்கேல்லை? .....

8. பின்வரும் வாக்கியங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்பத் தேவையான சொற்களைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

(i) தொட்டிகளில் வளர்க்கப்படும் பல ..... (வன்ன /வண்ண) மீன்கள் மனதிற்கு மகிழ்ச்சியைத் தருகின்றன.

(ii) நம் முன்னோர்கள் அனுபவ ரீதியாகக் கூறிய கூற்றுக்கள் ..... (பழமொழிகள் / பழமொளிகள்) எனப்படும்.

9. பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுக.

நட்சத்திரங்கள் வானில் மின்னின. - .....

10. எதிர்ப்பாற் சொல்லை எழுதுக.

பண்டிதன் - .....

11. பின்வரும் சொற்களுக்கான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

(i) Mosque - ..... (ii) Science - .....

12. பின்வரும் படங்களுக்கான ஆங்கிலச் சொற்களை எழுதுக.

(i)  ..... (ii)  .....

13. பின்வரும் ஆங்கிலச் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக்குக.

(i) many / There / books / are / library / in / the - .....

(ii) is / That / a / computer / big - .....

14. 'தும்ரிய ஸ்தானய' என்னும் சிங்களச் சொற்களுக்கான தமிழ்ச் சொற்களை எழுதுக?

.....

15. பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

இது என்ன விலை? - .....

16. 'நாற்பத்தோராயிரத்து எழுநூற்றுப் பதினாறு' என்னும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

.....

17. கட்டத்தினுள் தரப்பட்ட எண்களைக் கொண்டு ஆக்கக்கூடிய மிகப்பெரிய எண்ணை எழுதுக.

5	**6**
8	**0**

……..

18. பூக்கன்று விற்பனை நிலையத்தில் 3874 மல்லிகைக் கன்றுகளும் 9837 ஓர்க்கிற் கன்றுகளும் 1056 ரோசாக் கன்றுகளும் இருந்தன. அவ்விற்பனை நிலையத்திலிருந்த மொத்தப் பூக்கள் எத்தனை?

……..

19. கணேசன் 376 கொய்யாப் பழங்களை வாங்கி அதில் நான்கில் ஒரு பகுதியை நண்பனுக்குக் கொடுத்தான். அவன் நண்பனுக்குக் கொடுத்த பழங்கள் எத்தனை?

……

20. 36 லீற்றர் நிரப்பக் கூடிய தொட்டி ஒன்றில் 13 லீற்றர் 750 மில்லிலீற்றர் நீர் உள்ளது. இந்தத் தொட்டியை நிரப்ப மேலும் தேவையான நீரின் அளவு யாது?

……

21. சுவரின் நிலைக்குத்துத் தன்மையை அறிவதற்குப் பயன்படுத்தப்படும் உபகரணம் எது?

…….....

22. நிறைகளை அளக்கப் பயன்படும் ஒரு தராசின் பெயரை எழுதுக?

……

23. ‘0.75’ என்பதை வாசிக்கும் விதத்தை எழுதுக?

……

24. வீட்டில் யன்னல்களுக்குத் திரைச்சீலை இடுவதற்காக 15 மீற்றர் துணி தேவை. தற்போது அந்த நீளத்தின் காற்பங்கு நீளமுள்ள துணி உள்ளது. மேலும் தேவையான துணியின் அளவு யாது?

……

25. செங்கோணமுள்ள அடிப்படைத் தளவடிவங்கள் எவை?

……

26. வடக்குத் திசைக்கும் கிழக்குத் திசைக்கும் இடையே உள்ள திசை எது?

……


27. மோட்டார் வாகனம் ஒன்று அதிவேகப் பாதையில் கிளிநொச்சியிலிருந்து மன்னாருக்குச் செல்வதற்கு எடுத்த நேரம் 1 மணித்தியாலம் 45 நிமிடம் ஆகும். அவ் வாகனம் 18:00 இற்குப் புறப்பட்டது எனில், அது பயணத்தை முடித்த நேரம் யாது?

……

28. இராமன் ஓரிடத்திலிருந்து வடக்கு நோக்கி 5 மீற்றரும் கிழக்கு நோக்கி 5 மீற்றரும் தெற்கு நோக்கி 5 மீற்றரும் சென்றான். அவன் தற்போது ஆரம்பித்த இடத்திலிருந்து எத்திசையில் நிற்கின்றான்?

.....

29. சில பிள்ளைகள் விரும்பும் பூக்கள் கீழுள்ள வரைபில் காட்டப்பட்டுள்ளது. அதனை அவதானித்து விடை தருக.



(i) மல்லிகையை விட எத்தனை பேர் அதிகமாக ரோசாவை விரும்புகின்றனர்? .....

(ii) கணக்கெடுக்கப்பட்ட மாணவர்கள் எத்தனை பேர்?

.....

30 தொடக்கம் **59** வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

30) 'நான் எனது வீட்டுக்கும், பாடசாலைக்கும் ஒளியாவேன்' என்னும் கூற்று தியானப் படிமுறைகளில் எந்தப் படியில் அடங்கும்?

1. உள்ளத்தைத் தளர்த்துதல்
2. திடசித்தம்
3. பிரார்த்தனை
4. உதிப்பு

31) நாய் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் தவறானது எது?

1. செல்லப்பிராணியாக மனதிற்கு இதமளித்தல்
2. வீட்டைக் காவல் காத்தல்
3. பூச்சி புழுக்களைப் பிடித்து உண்ணுதல்
4. மனிதனுக்கு வேட்டையாட உதவுதல்

32) பின்வருவனவற்றுள் விலங்குணவாக அமைவது?

1. வினாகிரி
2. மாஜரின்
3. அச்சாறு
4. தேன்

33) சரியான தரங்கொண்ட தேயிலையை நீரில் இடும் போது நீர் எந்நிறத்தில் மாற்றமடையும்?

1. இளமஞ்சள்
2. இளஞ்சிவப்பு
3. கடுங்கபிலம்
4. சிவப்பு

34) அதிகளவு மின்சக்தியை நுகராததும் அதிகளவு ஒளியை வெளிவிடுவதுமான மின்குமிழ் எது?

1. LED மின்குமிழ்
2. CFL மின்குமிழ்
3. புளோளிர்வு மின்குமிழ்
4. மின்சூள் மின்குமிழ்

35) பாடசாலையொன்றில் தலைமைத்துவப் பதவி வகிப்பவர் யார்?

1. அதிபர்
2. ஆசிரியர்
3. மாணவர் தலைவர்
4. பகுதித் தலைவர்

36) வித்துக்களை நீக்கிய பின் உணவாகப் பயன்படுத்தப்படும் காய்கறி எது?

1. கத்தரி
2. பயற்றை
3. பூசனிக்காய்
4. நெல்

37) பின்வருவனவற்றுள் நெற்றுக்களை உருவாக்கும் தாவரம்?

1. வெண்டி
2. நெல்
3. பனங்காய்
4. கமுகு

38) பழைய கற்பாலம் அமைந்துள்ள இடம்?

1. கண்டி
2. அநுராதபுரம்
3. கம்பளை
4. யால

39) கலாவாவியைக் கட்டுவித்த மன்னன்?

1. தாதுசேனன்
2. மகாசேனன்
3. பராக்கிரமபாகு
4. வசபன்

40)'சுழலும் பந்து' செயற்பாட்டில் பந்து சுழல்வது?

1. காந்தத்தின் தள்ளும் இயல்பினால்
2. காந்தத்தின் கவரும் இயல்பினால்
3. குண்டூசியின் கவரும் இயல்பினால்
4. குண்டூசியின் தள்ளும் இயல்பினால்

41) மின்காந்தம் ஒன்றில் மின்கலங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் போது,

1. கவரும் சக்தி கூடும்
2. கவரும் சக்தி குறையும்
3. ஆணியில் சூடேறும்
4. ஆணியில் குளிரேறும்

42) மலேரியா நோய் பரவுவதற்குக் காரணமான பிராணி?

1. எலி
2. நுளம்பு
3. கரப்பான்
4. தும்பி

43) சப்பிரகமுவ மாகாணத்திலுள்ள ஒரு மாவட்டம்?

1. கேகாலை
2. மொனறாகல
3. பதுளை
4. கம்பஹா

44) 'இழுத்தல்' பொறி பயன்படுத்தப்படும் உபகரணம்?

1. கப்பி
2. ஒற்றைச்சில்லு வண்டி
3. குறடு
4. சாவணம்

45) பின்வருவனவற்றுள் புரதச் சத்துக்கொண்ட உணவு?

1. பால் 2. நெய்த்தோலிக் கருவாடு 3. வாழைப்பழம் 4. பப்பாசிப்பழம்

46) சமாந்தரமாகக் கட்டித் தொங்கவிடப்பட்ட சட்டக்காந்தத்தின் சிவப்பு நிறம் குறிப்பது?

1. மேற்கு 2. கிழக்கு 3. வடக்கு 4. தெற்கு

47) அசுத்த நீரைப் பருகுவதால் ஏற்படும் நோய் **அல்லாதது**?

1. ஈரலழற்சி 2. செங்கண்மாரி 3. மஞ்சட்காய்ச்சல் 4. கொப்பளிப்பான்

48) சிவப்பையும் மஞ்சளையும் கலக்கும் போது தோன்றும் நிறம்?

1. செம்மஞ்சள் 2. பச்சை 3. ஊதா 4. இளஞ்சிவப்பு

49) மழைவீழ்ச்சியை அளக்கப் பயன்படும் அலகு?

1. மில்லிலீற்றர் 2. லீற்றர் 3. மில்லிமீற்றர் 4. மீற்றர்

50) இலங்கையில் மூன்று மாவட்டங்களைக் கொண்ட மாகாணம்?

1. சப்ரகமுவ 2. ஊவா 3. கிழக்கு 4. வடக்கு

51) நயாகரா நீர்வீழ்ச்சி அமைந்துள்ள இடம் எது?

1. அமெரிக்கா 2. பிரேசில் 3. டென்மார்க் 4. கனடா

52) நடக்கத் தெரியாத பிராணி?

1. தாரா 2. குரங்கு 3. முயல் 4. கழுகு

53) இறுதி இராப்போசனம் என்னும் ஓவியத்தை வரைந்தவர் யார்?

1. லியனா டோ டாவின்சி 2. பிக்காசோ

3. செரான் டி செல்வா 4. கீரோன் வால்ட் வீர்

54) பச்சையம் இல்லாத தாவரம்?

1. காளான் 2. கள்ளி 3. அவரை 4. பருப்பு

55) பேரிச்சம்பழம் விளையும் நாடு எது?

1. இங்கிலாந்து 2. சிலி 3. அரேபியா 4. இங்கிலாந்து

56) தனது உணவை உறிஞ்சிக் குடிப்பது அல்லாதது எது?

1. நுளம்பு 2. தவளை 3. பேன் 4. மரவட்டை

57) விசர் நாய் கடித்த இடத்தை சுத்தம் செய்ய உகந்த திரவம் யாது?

1. சவர்க்கார நீர் 2. மண்ணெண்ணெய் 3. பெற்றோல் 4. டீசல்

58) உலகின் மிகப் பெரிய சமுத்திரம் எது?

1. இந்து சமுத்திரம் 2. பசுபிக் சமுத்திரம் 3. ஆட்டிக் சமுத்திரம் 4. துருவச் சமுத்திரம்

59) குறைந்தளவு நீரையும், அதிகளவு வளியையும் கொண்டுள்ள மண் எது?

1. களிமண் 2. இருவாட்டி மண் 3. மணல்மண் 4. புற்றுமண்

60) 'நான் இரசித்த சித்திரக் கண்காட்சி' என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.

1) ……...

……...

2) ……...

……...

3) ……...

……...